யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.

# J/ Hartley College, Point Pedro.

## விடுமுறைக்கால செயலட்டை – 2 –2020–தரம் 11
## Holiday Worksheet - 2 – 2020 –Grade 11

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழ் இலக்கிய நயம் | 48 | T | I,II, III | ஒரு மணித்தியாலம் 1 hours |

சுட்டெண் Index No

## தமிழ் இலக்கிய நயம்

### பகுதி – I

I தொடக்கம் X வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

1. **“ஆறலைகள்வர் படை விட அருளின் மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை”**
   I. இப்பாடல் அடி இடம்பெறும் இலக்கியம் எது?
   II. அதனை எழுதியவர் யார்?

2. **“அன்னகாலம் அகலும் அளவினில் முன்னை வீரன், இளவலை”**
   I. இங்கு குறிப்பிடப்படும் அணியை விளக்குக?
   II. முன்னை வீரனின் சகோதரர்கள் யாவர்?

3. **“கயிறுகளை மேயவிட்டு
   கொளுத்தன மாடுகள்
   பூசணி”**
   I. இக் ஹைகூ கவிதையில் மாடுகள், கயிறுகள் என்னும் குறியீடுகளால் குறிக்கப்படுவதை விளக்குக?
   II. பூசணியை தொடர்பு படுத்தி விளக்கும் விதத்தை விளக்குக?

4. **“மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத…”**
   I. இப்பாடல் இடம்பெறும் நூல், திணை, துறை என்பவற்றைத் தருக?
   II. இப்பாடல் மங்கள நிகழ்வில் இடம் பெறுவதாக கூறப்படும் விடயங்கள் 4 தருக?

5. **“சிரல்வாய் வனப்பினவாகி நிரலொப்ப
   ஈர்ந் தண்டளவந் தகைந்தன”**
   I. இப்பாடல் இடம்பெற்ற இலக்கியம் எது? தளவம் எனக்குறிப்பிடப்படும் பூ எது?
   II. இந் நிலத்திற்குரியது? எக்காலத்தில் பூக்கிறது?

02. நன்றி கொன்று அரு நட்போடு நார் அறுத்து
ஒன்றும் மெய்மை சிதைத்து, உரை பொய்த்துளார்
கொன்று நீக்குதல் குற்றத்தின் நீங்குமால்:
சென்று மற்று அவன் சிந்தையைத் தேர்குவாய்

<u>வானரங்கள் வெருவி, மலை ஓரீஇ</u>
கான் ஒருங்கு படர, அக்கார் வரை
மீன் நெருங்கிய வானகம் மீன் எலாம்
போனபின், பொலிவற்றது போன்றதே

1. இப்பாடற் பகுதி எக்காவியத்தில், எப்பகுதியில் அமைந்துள்ளது? இதனை தமிழில் பாடியவர் யார்?
2. இராமன் சுக்கிரீவன் மீது சுமத்தி நிற்கும் குற்றங்கள் எவை?
3. இலக்குமணன் வருகையின் போது கிட்கிந்தை மலையின் நிலை எவ்வாறு காட்டப்படுகிறது?
4. இப்பாடற்பரப்பில் காணப்படும் அணிகளை இனங்கண்டு விளக்குக.
5. அடிக்கோடிட்ட சொற்றொடரை விளக்குக.

## பகுதி – II

**கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியை வாசித்துத் தரப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.**

ஹைக்கூ ஒரு அனுபவப்பகிர்வு, வியப்பில் ஆழ்த்தும் வீச்சு, இரசனையூட்டும் அழகு,சிந்தனையெழுப்பும் அலை, உணர்ச்சியை ஏற்றும் தூண்டியுமாக அமையும் ஆற்றல் மிக்க வடிவம், ஒரு மின்னல் அல்லது மின்மினி எனலாம்

அனுபவத்தையும் உணர்வையும் பிறருக்கு தரமுயல்வது தான் ஹைக்கூ. உண்மையில் கலை இலக்கியம் அனைத்தினதும் நோக்கம் இது தான். கவிஞனோ, கலைஞனோ ஓவியனோ தனக்கு கிடைக்கும் அனுபவத்தை அப்படியே இழை அறுந்திடாதவாறு தன்சிருஷ்டியை பின்னி வாசகருக்கு பரிசளிக்கிறான். வாசகர்கள் தமது அனுபவ வெறியுடன் இணைத்து இரசித்து இன்புறுகிறார்கள். அல்லது துயருறுகிறார்கள். ஒரு கணப் பொழுதின் மகிழ்வை அல்லது துயர்வைப் பகிர்கிறது ஹைக்கூ.

கணப்பொழுதின் அனுபவமாக இருப்பினும் அது உணர்த்தும் சிந்தனைகளும் சம்பாசனைகளும், எதிர் வினைகளும், கேள்விகளும் அதிகம் வாசகர் மனசுக்குள் அவை எழுப்பும். இதனால் தான் ஹைக்கூ காந்தம் போல் இழக்கும் மொழி நடையும் பிரபஞ்சத்தின் அந்தரங்களை காட்சிப்படுத்தும் தத்துவப் பர்வையும் கொண்டுள்ளது எனலாம்.

1. ஹைக்கூ ஆற்றல் மிக்க வடிவம் என்பதை ஆசிரியர் எதனைக் கொண்டு நியாயப்படுத்துகின்றார்?
2. பிறரக்கு எதனைத் தருவது ஹைக்கூ என ஆசிரியர் காட்டுகின்றார்?
3. ஒருவருக்கு கிடைக்கும் அனுபவம் எவ்வாறு வாசகர்களுக்கு கையளிக்கப்படுகிறது?
4. ஹைக்கூ ஒரு கணப்பொழுதின் அனுபவமாக இருப்பினும் வாசகர் மனதில் எவ்விதம் அலை எழுப்புகின்றது?
5. ஹைக்கூ காந்தம் போல் இழுக்கும் எவ்விடயங்களைக் காட்சிப்படுத்தும் தத்துவப் பார்வை கொண்டது?

## பகுதி – III

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்குக.**

04. தீவு மனிதன் என்ற சிறுகதையில் கதாசிரியரின் தனிமை வெளிப்படுமாற்றையும், தலைப்பின் பொருத்தப்பாட்டையும் தருக?
05. மரம் என்பது உயர்திணை என்பதை விளக்க ஆசிரியர் குறிப்பிடும் அதாரங்களை விபரிக்குக?
06. நலம் புனைந்து உரைத்தலில் தலைவியின் அழகு, மென்மை குறிப்பிடப்படுமாற்றை விளக்குக?
07. சங்க காலத்திலும், சங்கமருவிய காலத்திலும் தலைவன் தலைவி மீது கொண்ட காதல், பாசம் வெளிப்படும் விதத்தை காலம் தோறும் அகம் எனும் பாடத்தின் அடிப்படையில் விளக்குக.